தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74) நிறைவேற்றப்படவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) 1974-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக் கால நீட்டிப்பு) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 25/74).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "1974-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் மூன்று பஞ்சாயத்துக்களையும் சேர்த்து மாநகராட்சியினுடைய தேர்தலை நடத்துவதாக இருக்கிறது. இப்பொழுது சில பஞ்சாயத்துக்களில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் தம்முடைய உறுப்பினர் பதவிக்காலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற முறையில் அவர்கள் ரிட் மனு போட்டிருக்கிறார்கள். ஒன்று, அவர்கள் அவற்றை வாபஸ் வாங்கச் சொல்ல வேண்டும்; அல்லது, அந்தத் தொகுதிகளை ஒதுக்கிவிட்டு இந்தத் தேர்தலை நடத்தக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்தை நான் சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து உரையை முடிக்கின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே "1974-ம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/74 நிறைவேற்றப்படவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

---

* 16-4-1974 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.